ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22 : 20.

சகோ.காலேப் யோசுவா,
Tele. 04630 456157

" ஓரேப் "
திருவைகுண்டம் - 628 601,
தூத்துக்குடி மாவட்டம்.



# விக்கிரகாராதனையான பொருளாசை



1. சத்தியத்தை அறியும் அறிவை அடைந்து, சிதறியிருக்கிற என் சகோதரரே உங்களுக்கு வாழ்த்துதல் சொல்லி நான் எழுதுகிறதாவது: உங்களுக்கு இரக்கமும் சமாதான மும் அன்பும் பெருகக்கடவது.

2. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே மெய்யான தேவன் என்று விசுவாசிக்கிறோம், பாவமன்னிப்புக்கு கர்த்தராகிய இயேசு கிறிஸ்து நாமத்தினால் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுள் ளோம், இப்பொழுது தீர்க்கதரிசியின் செய்தியில் நிலைத்திருக்கிறோம், ஆதலால் நாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி எனக் கூறிக்கொண்டே செய்திக்குப் புறம்பாக வாழ்ந்து, அநேகர் தங்களைத் தாங்களே வஞ்சித்துக்கொண்டிருக்கிறார்கள். ஏனென்றால் நாம் வாழ்ந்து கொண்டிருக் கும் இக்காலம் மிகக்கொடிதான வஞ்சிப்பின் காலம் ஆகும்.

3. கடைசி நாட்களின் கொடிய காலத்தில், அதாவது சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அனுப்பும் காலத்தில், கள்ள கபடமுள்ள வேலையாட்கள் தோன்றி தங்களது சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதனைகளினால், பலவித காற்றினாலே கடலின் அலைகள் அடிபட்டு அலைகிறது போல மக்களை அலைக் கழிக்கிறார்கள். அதே நேரத்தில் இதோ, மணவாளன் வருகிறார் அவருக்கு எதிர்கொண்டு போகப்புறப்படுங்கள் என்ற சத்தத்தை மணவாட்டி கேட்டு தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறாள். புத்தியுள்ள, புத்தியில்லாத கன்னிகைகள் இருவருமே தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள்.

4. ஆதலால் பரிசுத்தவான்களுக்கு ஒரு விசை ஒப்புக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தை, மூல உபதேசங்களை நீங்கள் விட்டு விலகிவிடாது, அதில் நிலைத்திருக்க வேண்டுமென்று உங்களை எச்சரிப்பது என் கடமையாயிருக்கிறது. இதினிமித்தமாக, அப்போஸ்தல தீர்க்கதரிசிகளின் உபதேசங்களை அவ்வப்போது உங்களுக்கு எழுதி, நீங்கள் அதில் நிலைத்திருக்க வேண்டும் என புத்தி சொல்லி வருகிறேன். இங்கு, இந்த வேளையில் **விக்கிரகாராதனையான பொருளாசை**யைக் குறித்து உங்களுக்கு எழுதி உணர்த்துவது எனக்கு நலமாய்க் கண்டது.

5. கர்த்தர் மோசேயைக் கூப்பிட்டு, நீ யாக்கோபு வம்சத்தாருக்குச் சொல்லவும், இஸ்ரவேல் புத்திரருக்கு அறிவிக்கவும் வேண்டியது என்னவென்றால், நீங்கள் என் வாக்கை உள்ளபடிக் கேட்டு, என் உடன்படிக்கையைக் கைக்கொள்வீர்களானால், சகல ஜனங்களிலும் நீங்களே எனக்குச் சொந்த சம்பத்தாயிருப்பீர்கள்; பூமியெல்லாம் என்னுடையது என்றார். தியானியுங்கள் யாத்.19:1-5. சங்கீதக்காரன் இது குறித்து பூமியும், அதின் நிறைவும், உலகமும் அதிலுள்ள குடி களும் கர்த்தருடையது என்கிறான். சங்.24:1, 1கொரி.10:26. கர்த்தர் வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும், அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கினார். யாத்.20:11. அவர் பூமியின் நடுவில் நானே கர்த்தர் எனக் கூறுகிறார். யாத்.8:22. மேலும் வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். ஆகாய்.2:8. கர்த்தராலே அதிகாரிகளும், பிரபுக்களும், பூமியிலுள்ள சகல நியாதிபதிகளும் ஆளகை செய்து வருகிறார்கள். நீதி.8:16. ஆக இந்த பூமி, அதன் குடிகள், இதிலுள்ள உடைமைகள் அதாவது வெள்ளி, பொன், ஆஸ்திகள் அதின்மேல் உள்ள ஆளுகை அனைத்தும் கர்த்தருக்கே உரியது, கர்த்தருக்கே சொந்தம்.

6. ஒருவன் தன் தாயின் கர்ப்பத்திலிருந்து நிர்வாணியாய் வந்தான்; வந்தது போலவே நிர்வாணியாய்த் திரும்பப்போவான்; அவன் தன் பிரயாசத்தினால் உண்டான பலனொன்றையும் தன் கையிலே எடுத்துக் கொண்டு போவதில்லை. அவன் வந்த பிரகாரமே போகிறான், இதுவும் கொடுமையான தீங்கு என பிரசங்கி கூறுகிறான். பிர.5:15,16. கர்த்தர் தமக்கேச் சொந்தமான ஆஸ்திகளை மனுமக்களுக்குக் கொடுக்கிறார். அவர் அவனுக்கு அவைகளை நல் நோக்கத்தோடு கொடுக்கிறார். இதைக் குறித்து யோபு கர்த்தர் கொடுத்தார், கர்த்தர் எடுத்தார், கர்த்தருடைய நாமத்திற்கு ஸ்தோத்திரம் என்கிறான். யோபு.1:21. கர்த்தரே தேசத்தில் ஒருவனுடைய சம்பத்தை பெருகப்பண்ணுகிறவர், ஒருவனையும், அவனுடைய வீட்டையும், அவனுக்குண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலி போடுகிறவர், ஒருவனுடைய கைகளின் கிரியைகளை ஆசீர்வதிக்கிறவர் யோபு.1:10.

7. பணம் எல்லாவற்றிற்கும் உதவும். பிர.10:19. திரவியம் (**Money**) கேடகம். பிர.7:12. பணத்தை விரயம் பண்ணாது, அதை விருத்தியடையச் செய்யவேண்டும் என்பதே தேவனுடைய நோக்கம். இதன் கருத்தை தாலந்தைக் குறித்த உவமையில் காணலாம். மத்.25:14-30. என் நெஞ்சமே, நீ கர்த்தரை நோக்கி: தேவரீர் என் ஆண்டவராயிருக்கிறீர், என் செல்வம் உமக்கு வேண்டியதாயிராமல்; பூமியிலுள்ள பரிசுத்தவான்களுக்கும், நான் என் முழு பிரியத்தையும் வைத்திருக்கிற மகாத்துமாக்களுக்கும் வேண்டியதாயிருக்கிறது என்று சொன்னாய் என்று தாவீது சங்கீதம் பாடுகிறான். சங்.16:2,3. ஆதிச்சபை விசுவாசிகளான திரளான கூட்டத்தார் ஒரே இருதயமும் ஒரே மனமுள்ளவர்களாய் இருந்தார்கள். ஒருவனும் தனக்குள்ளவைகள் ஒன்றையும் தன்னுடையதென்று சொல்லவில்லை. சகலமும் அவர்களுக்குப் பொதுவாயிருந்தது. நிலங்களையும் வீடுகளையும் உடையவர்கள் அவைகளை விற்று விற்கப்பட்டவைகளின் கிரயத்தைக் கொண்டுவந்து அப்போஸ்தலருடைய பாதபடியிலே வைத்தார்கள். அவனவனுக்குத் தேவையானதற்குத்தக்கதாய் பகிர்ந்துக் கொடுக்கப்பட்டது. அவர்களில் ஒருவனுக்கும் ஒன்றும் குறைவாயிருந்ததில்லை. அவர்களெல்லார்மேலும் பூரண கிருபை உண்டாயிருந்தது. அப்.4:32-35. இதுதான் உண்மை கிறிஸ்தவர்களின் ஐக்கியம், மகிழ்ச்சி, சமநிலைப் பிரமாணம்.

8. **தன் சகோதரனுக்குத் தேவையாயிருக்கும்போது அந்தத் தேவையை பூர்த்தி செய்வதற்கு தனக்குத் திராணியிருந்தும், உதவி செய்ய முன்வராத ஒருவனிடத்தில் கிறிஸ்தவ சகோதரத்துவத்தின் அடிப்படையான தெய்வீக அன்பு இல்லை. 1யோ.3:17. வாருங்கள் நாம் வசனத்தினாலும், நாவினாலும் மட்டுமல்ல; கிரியையினாலும் உண்மையினாலும் ஒருவரில் ஒருவர் அன்பு கூறுவோம். கர்த்தர் ஒருவனுக்கு ஆஸ்திகளைக் கொடுப்பதன் நோக்கம், தேவையுள்ளவர்களுக்கு அவன் கொடுத்து உதவவேண்டும் என்பதற்காகவே. உண்மையான தெய்வீக அன்பில் மட்டுமே உண்மையான சகோதரத்துவம் செயல் முறைக்கு வரும். அப்.2:45, 4:32,33. ஒருவன் கர்த்தர் தனக்குக் கொடுத்த ஆஸ்திகளில், நன்மை செய்ய அறிந்திருந்தும், அந்த நன்மையை பிறருக்குச் செய்யாமல் போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும். யாக்.4:17. ஆதலால் உன் சகோதரனுக்கு உன்னிடம் பொருள் இருக்கையில் கைமாறு கருதாமல் கடன்கொடு. லூக்.6:35. திரும்பத்தருவார்கள் என்ற நம்பிக்கையில் கொடாதே. அப்படிக்கொடுத்தால் அதினால் உனக்குப் பலன் என்ன? லூக்.6:31-34. நம்மிடம் தன்னலமற்ற தியாகம் தேவை. பிலி.2:5-8.**

9. **ஒருவனில் உள்ள விக்கிரகாராதனையான பொருளாசையே சமநிலைப் பிரமாணத்தை செயல் முறைக்குக் கொண்டுவர தடையாக இருக்கிறது.** ஆதலால் பிரியமானவர்களே நீங்கள் பண ஆசையில்லாமல், இருக்கிறவைகள் போதுமென்றிருங்கள். எபி.13:5,6. உன் சகோதரன் ஒருவன் பொருளாசைக்காரனாயிருந்தால் அவனோடு கர்த்தருடைய இராப்போஜனப்பந்தியில் பங்கு கொள்ளக்கூடாது என பவுல் கொரிந்தியருக்கு எழுதுகிறான். 1கொரி.5:11.

10. **ஒருவன் தன்னை விசுவாசி, இக்காலத்துக்குரியச் செய்தியில் நிலைத்திருக்கிறேன், மணவாட்டி என அழைத்துக்கொண்டு வட்டிக்காக தன் பணத்தை வங்கிகளிலும், ஆயுள் முதலீடு கழகத்திலும், பண சேமிப்பு நிதி நிறுவனங்களிலும் போட்டு, வட்டி வாங்குகிறவனாயிருந்தால் அவனும் விக்கிரகாராதனைக்காரனான பொருளாசைக்காரனே. வட்டி வாங்குகிறதற்கு மூலகாரணமாக இருக்கும் பாவம் பொருளாசையே. தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிறவன் கர்த்தருடைய கூடாரத்தில் தங்குவது இல்லை, அவருடைய பரிசுத்த ஸ்தலத்தில் வாசம் பண்ணுகிறதுமில்லை. சங்.15:1,5. தன் பணத்தை வட்டிக்குக் கொடுக்கிறவன் நீதிமான் அல்ல. எசே.18:8,9. அவன் மணவாட்டியுமல்ல, தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பவனுமல்ல. இவன் சபிக்கப்பட்டவன். எரே.15:10. இவ்வாறாக தங்கள் பணத்தை சேமிப்பு நிதி நிறுவனங்களில் போட்டு வட்டிவாங்குகிற யாவரும் தேவனுடைய இராஜ்யத்துக்குப் புறம்பானவர்களே.** ஆதலால் பிரியமானவர்களே ஐசுவரியவான்களாகவேண்டுமென்று பிரயாசப் படாதேயுங்கள். இல்லாமற்போகும் பொருள்மேல் உங்கள் கண்களைப் பறக்க விடுவானேன். நீதி.23:4,5.

11. இஸ்ரவேல் புத்திரர் எகிப்திலே குடியிருந்தக் காலம் 430 வருடங்கள். 430 வருடம் முடிந்த அன்றைய தினமே கர்த்தருடைய சேனைகள் எல்லாம் எகிப்து தேசத்திலிருந்து புறப்பட்டது. கர்த்தர் அவர்கள்மேல் பிரியமாயிருந்தபடியால், அவருடைய வலது கரமும், அவருடைய புயமும், அவருடைய முகத்தின் பிரகாசமும் அவர்களை இரட்சித்தது. பிதாக்களெல்லாரும் மேகத்துக்குக் கீழாயிருந்தார்கள், எல்லாரும் சமுத்திரத்தின் வழியாய் நடந்துவந்தார்கள். எல்லாரும் மோசேக்குள்ளாக மேகத்தினாலும் சமுத்திரத்தினாலும் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள். எல்லாரும் ஒரே ஞானபோஜனத்தைப் புசித்தார்கள். எல்லாரும் ஒரே ஞான பானத்தைக் குடித்தார்கள். அப்படியிருந்தும், அவர்களில் அதிகமான பேர்களிடத்தில் தேவன் பிரியமாயிருந்ததில்லை; ஆதலால் வனாந்தரத்திலே அவர்கள் அழிக்கப்பட்டார்கள். அவர்களில் சிலர் விக்கிரகாராதனைக்காரர் ஆனது போல நீங்களும் ஆகாதீர்கள் என்று அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்துவிலே உள்ள தேவனுடைய சபைக்கு எழுதுகிறான். 1கொரி.10:1-7.

12. இது நமக்கும் திருஷ்டாந்தமாக எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. என் ஜனங்களே நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப் படாமலும் இருக்கும்படிக்கு அவளை விட்டு வெளியே வாருங்கள் என்ற சத்தத்துக்கு செவி கொடுத்து, சபை ஸ்தாபனங்களை விட்டு வெளியே வந்து, மனந்திரும்பி பாவமன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டோம்,

கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்க, கர்த்தருடைய இராப்போஜனத்தில் பங்குகொள்ளு கிறோம், இங்கு நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியம், இந்த ஒரே அப்பத்தில் நாம் அனைவரும் பங்கு கொள்ளுகிறபடியால் அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமா யிருக்கிறோம். 1கொரி. 10:16,17. மேலும் நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப் பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக் குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். 1கொரி.12:13. இப்படியிருந்தும் நம்மில் அதிகமான போகளிடத்தில் தேவன் பிரியமாயில்லை, அவர்கள் அழிக்கப்பட்டார்கள். நம்மிலும் சிலர் விக்கிரகாராதனைக்காரராகிய பொருளாசைக் காரராகி விட்டார்கள். அப்படியே நீங்களும் ஆகாதீர்கள் என்று நமக்கும் திருஷ்டாந்தமாக எச்சரிக்கை எழுதி வைக்கப்பட்டுள்ளது.

13. **இப்பொழுது விக்கிரகம் என்றால் என்ன? காணப்படுகிற அல்லது காணப்படாத ஒரு பொருளின் உருவத்தை மனுஷன் தன் கை வேலையினால் உருவாக்கி, அதைத் தெய்வமாகத் தொழுதுகொள்ளுகிறான். இந்த உருவமே விக்கிரகம். இந்த உருவாக்கப்பட்ட உருவத்தை தெய்வம் என்று ஆராதிப்பதே விக்கிர காராதனை.**

14. தேவன் பேசிச்சொல்லிய வார்த்தை என்ன? என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்கவேண்டாம். மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ்த் தண்ணீரிலும் உண்டாயிருக்கிற வைகளுக்கு ஒப்பான ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கிரகத்தை யாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்; நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். யாத்.20:3-5.

15. **கர்த்தருக்கு அருவருப்பான காரியமாகிய தொழிலாளிகளுடைய கை வேலையில் செய்யப்பட்டதும் வார்ப்பிக்கப்பட்டதுமான யாதொரு விக்கிரகத்தை உண்டுபண்ணி ஒளிப்பிடத்திலே வைத்திருக்கிறவன் சபிக்கப் பட்டவன். விக்கிரகாராதனை நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கு அருவருப்பு. உபா.27:15. யாதொரு சிலையை யும் நிறுத்தவேண்டாம், உன் தேவனாகிய கர்த்தர் அதை வெறுக்கிறார். உபா.16:22.**

16. ஆக விக்கிரகங்களை உண்டாக்கி, அவைகளை ஒளிப்பிடங்களிலே வைக்கிறவன், அவைகளை ஆராதிக்கிறவன் சபிக்கப்பட்டவன் என்பது பழைய ஏற்பாடு உபதேசம். புதிய ஏற்பாட்டில் பொருளாசை விக்கிர காராதனைக்கு ஒப்பாகக் கூறப்பட்டுள்ளது. ஆதலால் பொருளாசை கர்த்தருக்கு அருவருப்பானது, பொருளாசைக் காரன் கர்த்தரால் சபிக்கப்பட்டவன்.

17. இயேசு கிறிஸ்து பொருளாசையைக் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்; ஏனெனில் ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் இல்லை என்கிறார். மேலும் இதற்கு எடுத்துக் காட்டாக, ஒருவனுடைய நிலம் நன்றாய் விளைந்தது. அப்பொழுது அவன், நான் ஒன்று செய்வேன், என் களஞ்சி யங்களை இடித்து பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும், என் பொருட்களையும் அங்கே சேகரித்து வைத்து, ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருட்கள் சேகரித்து வைக்கப் பட்டிருக்கிறது; நீ இளைப்பாறி, புசித்துக்குடித்து, பூரிப்பாயிரு என்று என் ஆத்துமாவோடே சொல்லுவேன் என்று தனக்குள்ளே சிந்தித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது தேவன் அவனை நோக்கி, மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக்கொள்ளப்படும், அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடைய தாகும் என்றார். தியானியுங்கள். லூக்.12:15-20.

18. இவ்வாறாக இயேசு பொருளாசையைக்குறித்து கடிந்துகொண்டு, தம்முடைய சீஷர்களிடம் என்னத்தை உண்போம் என்று உங்கள் ஜீவனுக்காகவும், என்னத்தை உடுப்போம் என்று உங்கள் சரீரத்துக்காகவும் கவலைப்படாதீர்கள். என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம் என்று நீங்கள் கேளாமலும் சந்தேகப்படா மலும் இருங்கள். இவைகளையெல்லாம் உலகத்தார் நாடித்தேடுகிறார்கள். இவைகள் உங்களுக்கு வேண்டிய வைகளென்று உங்கள் பிதாவானவர் அறிந்திருக்கிறார். ஆதலால் முதலாவது தேவனுடைய இராஜ்யத்தையே தேடுங்கள். அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக்கொடுக்கப்படும் என்று கூறினார். தியானியுங்கள். லூக்.12:22,29-31.

19. இயேசு கிறிஸ்துவின் அப்போஸ்தலனாகிய பவுல் கொலோசெ பட்டணத்தில் கிறிஸ்துவுக்குள் பரிசுத்தவான்களும், விசுவாசிகளுமாயிருக்கிற சகோதரர்களுக்கு எழுதும்போது விக்கிரகாராதனையாகிய பொருளா சையை பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். கீழ்ப்படியாமையின் பிள்ளை கள்மேல் தேவகோபாக்கினை வரும் என எச்சரிக்கிறான். கொலோ.3:5. கிறிஸ்துவுடன்கூட மரித்து, உயிர்த் தெழுந்து, மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனுடைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக்கொண்ட நாம் கிறிஸ்து தேவனுடைய வலது பரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள மேலானவை களைத் தேடவேண்டும். பூமியிலுள்ளவைகளையல்ல, மேலானவைகளையே நாடவேண்டும் என்று புத்திமதி கூறுகிறான். கொலோ.3:1.

20. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் இதுகுறித்து எபேசுவிலே கிறிஸ்து இயேசுவுக்குள் விசுவாசிகளாயிருக்கிற பரிசுத்தவான்களுக்கு எழுதும்போது பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, பொருளாசை பேர் முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படக் கூடாது என்கிறான். எபே.5:3. மேலும் பொருளாசைக்காரன் ஒரு விக்கிரகாராதனைக்காரன் எனவும் கூறுகிறான். எபே.5:5.

21. அடுத்து பவுல், விசுவாசத்தில் உத்தமகுமாரனாகிய தீமோத்தேயுவுக்கு எழுதும்போது: பணஆசை எல்லாத்தீமைக்கும் வேராயிருக்கிறது: சிலர் இதை இச்சித்து விசுவாசத்தை விட்டுவிலகி, அநேக வேதனைகளாலே தங்களை உருவக்குத்திக் கொண்டிருக்கிறார்கள் என்கிறான். 1தீமோ.6:10.

22. நான் என்னுடைய 22 ஆண்டுகள் ஊழியத்தின் பாதையில் கண்டது ஊழியர்களும், விசுவாசிகளும் தாங்கள் பரிசுத்தஆவியை பெற்றுள்ளோம், எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தமாக இருக்கிறோம் என்று எவ்வளவுதான் கூறினாலும் உலகத்தைத்தான் தங்கள் உள்ளத்தில் வைத்திருக்கிறார்கள். பண ஆசையே ஒரு குடும்பத்தில் தகப்பனுக்கும் மகனுக்கும், தாய்க்கும் மகளுக்கும், சகோதரனுக்கும் சகோதரனுக்கும், சகோதரிக்கும் சகோதரிக்கும் இடையில் பிரிவினையை உண்டாக்குகிறது. அவ்வாறாகவே ஆவிக்குரிய குடும்பத்திலும் பண ஆசையே ஊழியர்கள் மத்தியில் ஒருவருக்கொருவருக்குள்ளும், ஊழியர்களுக்கும் விசுவாசி களுக்கும் மத்தியில் பிரிவினையை உண்டாக்குகிறது. பண ஆசையினால் அநேக ஊழியர்கள், விசுவாசிகள் தங்கள் ஆதி விசுவாசத்தை விட்டு விலகிப்போனார்கள். பணம் எங்கு சேருகிறதோ அங்கு உண்மையான ஊழியத்தையும், விசுவாசத்தையும் காணமுடியவில்லை.

23. நான், என் ஊழியத்தின் பாதையில் வழி நடக்கும் முன்பு ஓரளவு பணவசதிகள் உடையவனாகவே இருந்தேன். என் குடும்பத்தில், என் மனைவி குடும்பத்தில் அனைவரும் எங்களோடு நல் உறவில் இருந்தார்கள். கிறிஸ்துவுக்குள் உன்னதத்திலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் நாங்கள் பெருகப் பெருக, உலக ஐசுவரியத்தில் குறைவு காணப்பட்டது. பணவசதியில் நாங்கள் குறைவுபட ஆரம்பித்ததினால், எங்கள் குடும்பத்தினர் எங்களில் குற்றம் கண்டுபிடிக்க ஆரம்பித்தனர். ஒவ்வொருவராக எங்களை விட்டு விலகிச் சென்றனர். ஆக, பணமே எங்கள் குடும்பத்தில், எங்களுக்கும் மற்றவர்களுக்கும் மத்தியில் பிரிவினையைக் கொண்டுவந்தது. குடும்பத்தில் நாங்கள் இந்நாட்களில் தனிமரமாக நின்று கிறிஸ்துவுக்குள் அனுதினமும் ஓங்கி வளர்ந்து வருகிறோம். ஊழியத்தின் பாதையிலும் சத்தியத்தைச் சொல்லுவதினால் சத்துருவாகி, இங்கும் தனிமரமாகவே நிற்கின்றோம். எங்கும், எதிலும், எப்பக்கத்திலும் நெருக்கம், நிந்தை, இறுக்கமான, இக்கட்டான சூழ்நிலைகள். ஆனால் எந்த சூழ்நிலையிலும் நானும் எனது மனைவி, மக்களும் கிறிஸ்துவுக்குள் மனரம்மியமாக இருக்கக் கற்றுக் கொண்டோம். கர்த்தர் எங்களுக்கு துணையாக நிற்பதினால் நாங்கள் அசைக்கப்படுவதில்லை. எங்களுக்கு உதவ, கர்த்தர் தம்முடைய பிள்ளைகளில் ஒரு சிலரை எங்களுக்காக ஆசீர்வதித்திருக்கிறார். அவர்கள் மூலமாக எங்கள் தேவைகள், ஏற்ற வேளைகளில் சந்திக்கப்படுகிறது. தேவகிருபையினால் செல்லும் இடங்களிலெல்லாம் மனுஷர் கண்களில் தயவு கிடைக்கிறது. கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு மகிமை உண்டாவதாக.

24. நான் சத்தியத்தை அறிந்த ஒரு ஆவிக்குரிய சகோதரனை அறிவேன். இந்த சகோதரனுக்கு திருமணம் ஆகி இரு குழந்தைகள் இருந்தன. திடீரென வெளிநாடு சென்று பணம் சம்பாதிக்கவேண்டும் என்ற பொருளாசை உள்ளத்தில் ஊற்றெடுத்தது. ஓரிரு லட்சங்கள் செலவு செய்தார், வெளிநாடு சென்றார். பல ஆண்டுகளில் பல லட்சங்கள் சம்பாதித்தார். சம்பாதித்த பணத்தோடு மனைவி மக்களைக் காண ஆசையுடன் வந்தார். அவர் வந்தபோது அவரது மனைவி மற்றொருவனை மறுமணம் செய்து இல்லறவாழ்க்கை நடத்திக் கொண்டிருந்தார். பாருங்கள், பண ஆசை ஒரு குடும்பத்தையே சின்னாபின்னமாக்கி விட்டது. பண ஆசை கணவனையும் மனைவியையும் பிரித்துவிட்டது.

25. மற்றொரு ஆவிக்குரிய சகோதரனையும் அறிவேன். சத்தியத்தை அறிகிற அறிவை அடைந்த நாட்களில் எப்பொழுதும் கையில் பைபிள் மற்றும் தீர்க்கதரிசியின் ஒரு சில செய்திப் புத்தகங்கள் இருக்கும். அதை எப்பொழுதும் தியானிப்பதிலும், அவ்வப்போது ஊழியங்களை தாங்குவதிலும் நாட்டமுள்ளவராயிருந்தார். ஒருமுறை எனக்கு பத்திரிக்கைகள் அனுப்ப ஸ்டாம்புகள் வாங்க போதுமான பணவசதி இல்லை. இதை அறிந்த அவர் தன்கையில் இருந்த கைக்கடிகாரத்தை அடகுவைத்து, பணம்பெற்று, ஸ்டாம்புகள் வாங்கிக்கொண்டு வந்தார். அந்த அளவுக்கு தான் அறிந்த சத்தியத்தை மற்றவர்களும் அறியவேண்டும் என்ற வாஞ்சை அவரை ஆட்கொண்டு இருந்தது. இந்நிலையில் சாத்தான் யூதாஸ்க்குள் நுழைந்ததுபோன்று இவருக்குள்ளும் நுழைந்தான். பணஆசை மெதுவாக உள்ளத்தில் வேர்கொண்டது. மற்றவர்கள் போல் தானும் ஆடம்பரமாக வாழ பணம் வேண்டும் என்ற குறிக்கோளுடன் பணம் சம்பாதிக்க முயற்சித்தார். தன் முயற்சியில் வெற்றியும் கண்டார். பல லட்சங்கள் சம்பாதித்தார். சொத்து ஆஸ்திகளை வாங்கினார். ஆடம்பரமாக வாழ்ந்தார். இவை யனைத்தும் இன்றும் இவருக்கு இருந்தாலும் குடும்பத்தில், மனதில் நிம்மதியில்லை, பண ஆசையை இச்சித்து விசுவாசத்தை விட்டு விலகிப்போனார். இப்பொழுது அநேக வேதனைகளாலே தன்னை உருவக்குத்திக்கொண்டு இருக்கிறார். கர்த்தருடைய ஆசீர்வாதமே ஐசுவரியத்தைத் தரும். அதனோடே அவர் வேதனையைக் கூட்டார். நீதி.10:22.

26. பொருளாசையைக் குறித்து மேலும் தேவனுடைய வார்த்தைக்குச் செவிகொடுங்கள். ஜனங்கள் கூடி வருகிற வழக்கத்தின்படி உன்னிடத்தில் வந்து, உனக்கு முன்பாக என் ஜனங்கள்போல் உட்கார்ந்து உன்

வார்த்தைகளைக் கேட்கிறார்கள்: ஆனாலும் அவர்கள் அவைகளின்படி செய்கிறதில்லை: அவர்கள் தங்கள் வாயினாலே இன்பமாய்ப் பேசுகிறார்கள்: அவர்கள் இருதயமோ பொருளாசையைப் பின்பற்றிப் போகிறது. எசே.33:31. இவர்களைக் குறித்துத்தான் இயேசு ஜனங்கள் தங்கள் வாயினால் என்னிடத்தில் சேர்ந்து, தங்கள் உதடுகளினால் என்னைக் கனம்பண்ணுகிறார்கள்: அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது, இவர்கள் மாயக்காரர்கள் என இயேசு கூறுகிறார். மத்.15:7,8.

27. நான் ஒரு ஆவிக்குரிய சகோதரனை நன்கு அறிவேன். கணவன் மனைவி இருவரும் அரசாங்க உத்தி யோகத்தில் இருக்கிறார்கள். மாதம் குறைந்தது ரூ.20,000/- வருமானம் உண்டு. ஒரேயொரு பையன் மட்டும் உண்டு. சகோதரன் இக்காலத்துக்குரிய செய்தியில் மிக்க வாஞ்சையுள்ளவராக காணப்பட்டார். தீர்க்கதரிசியின் செய்திகளை எப்பொழுதும் தியானிப்பவர் ஆனாலும் தன் பொருளாதாரத்தினால் ஊழியர்க ளையோ, ஊழியங்க ளையோ தாங்க வேண்டும் என்ற மனப்பக்குவம் கிடையாது. பல ஆண்டுகளுக்கு முன்பு ஒருமுறை நான் மிக்க இக்கட்டான நிலையில் இருந்தபோது சிறிது பண உதவிகேட்க, அவருக்குக்கொடுக்க மனமில்லை. இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு எனது வீட்டிற்கு இரவு 7மணியளவில் வந்து, இரவு ஆகாரத் திற்கு பின்பு, நாங்கள் இருவரும் ஒரு தனிமையான இடத்திலிருந்து அநேக ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து காலை 5மணி வரை தியானித்துக் கொண்டிருந்தோம். என்னுடைய ஊழியத்தின் பாதையில், வாழ்க்கையின் பாதையில் உள்ள பல பிரச்சினைகளைக் கேட்டு அறிந்து, இதில் உங்களுக்கு மிக முக்கிய மான பிரச்சினை யில் நான் உதவிசெய்ய கடமைப்பட்டிருக்கிறேன் என்றுகூறி, தான் ஊர் சென்றவுடன் ஆவண செய்வதாகக் கூறிச்சென்றார்.

28. நாட்கள் கடந்தன, அவரிடமிருந்து பதில் எதுவுமில்லை. கடிதங்கள் எழுதினேன், பதில் இல்லை. தந்தி கொடுத்தேன், அதற்கும் பதில் இல்லை. எனக்கு அவர் ஊரில் இருக்கிறாரா என்ற ஐயத்தைத் தீர்க்க பதிவுத்தபால் ஒன்று அனுப்பினேன். அவர் கடிதம் பெற்றுக்கொண்ட அத்தாட்சி எனக்கு வந்து சேர்ந்தது. ஆனாலும் அவரிடமிருந்து பதில் எதுவுமில்லை. பாருங்கள், வாயினால் இன்பமாய்ப்பேசுகிறார்கள், ஆனால் அவர்கள் இருதயமோ தங்கள் செல்வத்திலிருந்து, ஐசுவரியத்திலிருந்து ஊழியங்களை, ஊழியர்களை தாங்கும் மனமில்லை. இதன் காரணம் என்ன? விக்கிரகாராதனையான பொருளாசையே. தனது செல்வம் குறைந்துவிடக் கூடாது என்ற கஞ்சத்தனமே. ஆனால் நீதிமான் பிசினித்தனமில்லாமல் கொடுப்பான். நீதி.21:26.

29. மேலும் பொருளாசையைக் குறித்து இயேசு ஜனங்களை வரவழைத்து, அவர்களை நோக்கி: நீங்கள் எல்லாரும் எனக்குச் செவிகொடுத்து உணருங்கள் என்று கூறி, மனுஷனுக்குப் புறம்பே இருந்து அவனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்த மாட்டாது : அவன் உள்ளத்திலிருந்து புறப்படுகிறவைகளே அவனைத் தீட்டுப்படுத்தும். ஏனென்றால் மனுஷனுடைய இருதயத்திலிருந்து பொருளாசைப் புறப்பட்டு, பொல்லாங்கானதான இது ஒருவனுடைய உள்ளத்திலிருந்துப் புறப்பட்டு அவனைத் தீட்டுப்படுத்தும், கேட்கிறதற்கு ஒருவன் காதுள்ள வனாயிருந்தால் கேட்கக்கடவன் என்றார். மாற்.7:14-23. **ஒருவன் மெய்யான நீதியிலும் பரிசுத்தத்திலும் தேவனு டைய சாயலாகச் சிருஷ்டிக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளாதவரை, தன்னை சிருஷ்டித்தவ குடைய சாயலுக்கொப்பாகப் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொள்ளாத வரை எபே.4:24, கொலோ.3:10 ஒருவனிடம் ஆவியின் கனிகளை எதிர்பார்க்க முடியாது. பொருளாசைக்காரன் பழைய மனிதனேயன்றி புதிய மனிதன் அல்ல.**

30. ஒருவன் ஒண்டிக்காரனாயிருக்கிறான், அவனுக்கு உடனாளியுமில்லை, அவனுக்குப் பிள்ளையும், சகோதரனும் இல்லை, அப்படியிருந்தும் அவன் படும் பிரயாசத்துக்கு முடிவில்லை. அவன் கண் ஐசுவரியத்தி னால் திருப்தியாகிறதுமில்லை. இதுவும் மாயை, தீராத தொல்லை. பிர.4:8.

31. வடநாட்டிற்கு ஒருமுறை மூன்று நாட்கள் கூட்டங்களுக்கு அழைக்கப்பட்டுச் சென்றிருந்தேன். அங்கு பாஸ்டர் குடும்பத்தில், அவர் சகோதரர் ஒருவர் அரசு உடமையாக்கப்பட்ட வங்கியில் பணிபுரிகிறார். சத்தியத்தை அறிந்து, அதற்குக் கீழ்ப்படிந்து விசுவாசியாயிருக்கிறார். அவரது மனைவி பெந்தெகொஸ்தே அனுபவ ஸ்திரி என்று கூறினார்கள். ஆனாலும் இக்காலத்திற்குரிய செய்தியே ஏற்றுக்கொள்ள முன்வரவில்லை. பல ஆண்டுக ளாக இந்த சகோதரன், தன் மனைவியை இதினிமித்தமாக பலவந்தப்படுத்தினார், துன்புறுத்தினார் எனவும் கேள்விப்பட்டேன். ஆனாலும் அவரது மனைவி அவருடன் விசுவாசத்தில் ஒருமனப்பட்டு வரவில்லை. கணவன் மனைவி இருவரும் சம்பாதிக்கிறார்கள். சுமார் ரூ.15,000/- வருமானம் பிரதிமாதம் வருகிறது. பிள்ளைகள் இல்லை. கூட்ட நாட்களில் ஒருநாள் இரவு சகோதரன் என்னை தன் வீட்டிற்கு இரவு ஆகாரத்திற்கு அழைத்துச் சென்றார். ஆகாரத்தை முடித்து நான் அவர்கள் வீட்டைவிட்டு வெளியே வரும் சமயம் அந்த சகோதரனுடைய மனைவி என்னிடம் பிரதர் சாப்பாடு எப்படி இருந்தது என்று வினவ, நான் அவர்களுடைய சமையல் பிரமாதம் என்று கூற, அவர்கள் என்னை மறுபடியும் மறுநாள் இரவு என்னை தங்கள் வீட்டிற்கு ஆகாரத்திற்காக அழைப்புக் கொடுத்தார்கள்.

32. நான் இன்று இரவுதான் உங்கள் வீட்டிற்கு வந்தேனே, பின் நாளை எதற்கு என்று கூற, அவர்கள் இன்று சகோதரர் உங்களை அழைத்துக்கொண்டு வந்தார், நாளை நான் உங்களுக்கு அழைப்புக் கொடுக்கிறேன் என்றார்கள். நான் சகோதரியே, அவர் என் ஆவிக்குரிய சகோதரர், அந்த உறவில் விருந்துக்கு வந்தேன்.

ஆனால் நீங்கள் இன்னும் ஒரு ஆவிக்குரிய சகோதரியாக மாறவில்லையே என்றேன். கடந்த 7,8 ஆண்டுகளாக உங்கள் இருதயத்தைக் கடினப்படுத்தி வருகிறீர்கள் என ஒருசில வார்த்தைகள் மட்டுமே பேசினேன். பைத்தியமாகத் தோன்றிய எனது வார்த்தைகள் அவர்கள் தன்னை ஞானஸ்நானத்திற்கு ஒப்புக்கொடுக்க வைத்தது.

33. பின் இந்தக் குடும்பத்தோடு எனக்கு ஐக்கியம் ஏற்பட்டது. கணவன் மனைவி இருவரும் சம்பாதிப்பதினால் நல்ல வருமானம் உண்டு. சொந்த வீடு உண்டு. ஆனாலும் நான் அறிய இதுவரை தங்கள் ஆஸ்திகளால் கர்த்தருடைய ஊழியத்தையோ, ஊழியக்காரர்களையோ தாங்குவதில்லை. பணம் சேமிப்பதையே தங்கள் குறிக்கோளாகக் கொண்டுள்ளார்கள். ஒருமுறை இதுகுறித்து நான் அவர்களை கடிந்துக்கொண்டேன். அதற்கு அவர்கள், பாருங்கள் சகோதரனே எங்கள் இருவருக்கும் பென்ஷன் உள்ள வேலையில்லை. மேலும் குழந்தைகள் இல்லை. ஆதலால் நாங்கள் ஓய்வுகால வாழ்க்கைக்கு சேர்த்து வைக்கவேண்டியதாயிருக்கிறது. ஆதலால் நாங்கள் ஊழியத்தைத் தாங்குவதில்லை எனக்கூறி வருத்தப்படாதீர்கள் என்றார்கள். பிரசங்கி இதுகுறித்து, அவனுக்குப் பிள்ளையில்லை, ஆனாலும் அவன் ஐசுவரியத்தால் திருப்தியாகிறது இல்லை என்கிறான். சங்கீதக்காரனும் இதோ, அவர்கள் துன்மார்க்கர்கள், இவர்கள் என்றும் சுகஜீவிகளாயிருந்து, ஆஸ்தியைப் பெருகப்பண்ணுகிறார்கள் என்கிறான். சங்.73:12. வீட்டோடே வீட்டைச்சேர்த்து, வயலோடே வயலைக் கூட்டுகிறவர்களுக்கு ஐயோ என ஏசாயா.5:8ல் வாசிக்கிறோம்.

38. இவர்கள் அனைவரையும் பொருளாசை என்னும் கேடான சிந்தனைக்குத் தேவன் ஒப்புக்கொடுத்திருக்கிறார். ரோ.1:29. இக்காலத்துக்குரிய செய்தியில் பொருளாசையில் வாழும் அனைவரையும் தேவன் அவ்வாறாகவே ஒப்புக்கொடுத்திருக்கிறார். கடைசி நாட்களில் மனுஷர்கள் பணப்பிரியராயிருப்பார்கள் என்ற வார்த்தை இவர்களில் நிறைவேறுகிறதை நாம் காண்கிறோம். 2தீமோ.3:2.

39. அநேகர் திருவசனத்தைக் கேட்கிறார்கள், உபதேசங்களுக்குச் செவிகொடுக்கிறார்கள். ஆனால் கேட்ட வசனத்தின்படி நடந்து பலன்கொடுக்க முடியவில்லை. காரணம் உலக கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமுமாகும். மத்.13:22. ஒருநாள் ஒருவன் இயேசுவிடம் ஓடிவந்து, நல்ல போதகரே நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள நான் என்ன செய்யவேண்டும் என்றுக்கேட்டான். இயேசு அவனிடம் கற்பனைகளைக்கூறி அவைகளை கடைபிடிக்கும்படிக் கூறினார். அவன் அதெல்லாவற்றையும் தன் சிறு வயது முதல் கைக்கொண்டு வருவதாகக் கூறினான். இயேசு அவனிடத்தில் அன்பு கூர்ந்து உன்னிடத்தில் ஒருகுறை உண்டு: நீ போய், உனக்கு உண்டானவைகள் எல்லாவற்றையும் விற்று, தரித்திரருக்குக் கொடு, பின்பு உன் சிலுவையை எடுத்துக்கொண்டு, என்னைப்பின்பற்றி வா என்றார். அவன் ஐசுவரியமுள்ளவனாயிருந்தபடியால் மனமடிந்து, துக்கத்தோடே போய் விட்டான். ஆதலால் இயேசு ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கையாயிருக்கிறவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிப்பது எவ்வளவு அரிதாயிருக்கிறது என்றார். மத்.10:17-24. பாருங்கள், ஐசுவரியம் ஒருவனை தேவனிடத்தில் சேர்க்க ஒட்டாதபடிக்குத் தடையாயிருக்கிறது. ஆதலால் தான் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு இந்த உலகப்பிரகாரமான ஐசுவரியத்தைக் கொடுப்பது இல்லை. ஆனால் அவர்களின் அத்தியாவசியமானத் தேவைகளை ஏற்றவேளைகளில் சந்திக்கிறார். ஆபிரகாமுக்கு தேவன் யேகோவாயீரே இருந்ததுபோன்று இவர்களுக்கும் இருக்கிறார்.

40. இங்கு இவனது ஆஸ்தி, செல்வம் கர்த்தருடைய வார்த்தையின்மேல் அவநம்பிக்கையை கொண்டு வந்தது. இவன் தன் பொக்கிஷத்தின்மேல் தான் தன் இருதயத்தை வைத்திருந்தான். தேவனுடைய வார்த்தையின் மேல் தன் இருதயத்தை வைக்கவில்லை. இப்படிப்பட்டவர்கள் கர்த்தருடைய ஆளுகைக்கு வெளியே உள்ளவர்கள். இன்றும் தங்களை கிறிஸ்தவர்கள், கடைசிக்கால செய்தியில் இருக்கிறோம் என்று கூறுபவர்களில் அநேகர் கர்த்தருடைய ஆளுகைக்கு வெளியே இருக்கிறார்கள். ஏனென்றால் பொருளாசை இன்னும் அவர்களுடைய இருதயத்திலிருந்து அகலவில்லை. ஆதலால்தான் இயேசு உங்கள் பொக்கிஷம் எங்கே இருக்கிறதோ அங்கே உங்கள் இருதயம் இருக்கும் எனக்கூறினார். லூக்.12:34.

41. ஊழியத்தின் பாதையில் ஒரு ஊழியக்காரன் பணவசதியுடன் ஆடம்பர வாழ்க்கை வாழ்வதுதான் ஊழியம் ஆசீர்வதிக்கப்படுகிறது என்று கூறுகிறார்கள் ஆனால் அது முற்றிலும் தவறு. இந்த ஆசீர்வாதம் ஆவிக்குரியவனுடைய ஆசீர்வாதமில்லை. பாருங்கள், பவுல் கிறிஸ்துவுக்குள் வருமுன் வசதியுள்ள வாழ்க்கை வாழ்ந்தான். கிறிஸ்துவைத் தரித்தபின் அவன் தரித்திரரானான். இயேசுவும் தன் ஊழியத்தின் பாதையில் தனக்கு தலைசாய்க்க இடமில்லை என்று கூறினார். மேலும் ஆதி சபைக்காலத்து ஊழியர்கள் சுகபோகமாக வாழ்ந்ததாக எங்கும் ஆதாரங்கள் இல்லை. கிறிஸ்தவ வாழ்க்கையே தன்னைத்தானே வெறுத்து, தன் சிலுவையை சுமந்து செல்வும் வாழ்க்கையாகும். கிறிஸ்தவ வாழ்க்கையில், ஊழியத்தில் ஆடம்பர வாழ்க்கை ஒரு வஞ்சிப்பு.

42. இங்கு எங்கள் மத்தியில் பணவசதிகளுடைய ஒரு நூதன ஊழியக்காரர், தான் இக்காலத்திற்குரிய செய்தியில் இருப்பதாகக் கூறி ஊழியம் செய்து வருகிறார். இவரது சபையில் பெண்கள் பொன் ஆபரணங்கள் அணிந்து, விலையுயர்ந்த வஸ்திரங்கள் தரித்து, தங்கள் தலையில் பூக்கள் சூடி ஆராதனைக்கு வருகிறார்கள். இங்கு பொதுவாக விசுவாசிகளுடைய பண்பாடு, நாகரீகம் அனைத்தும் C.S.I. சபை முறையில்தான். இதுகுறித்து பாஸ்டரிடம் விளக்கம் கேட்டபோது, நாம் ராஜரீக சந்ததி. ஆதலால் இராஜாக்கள் மாதிரி ஆடம்பரமாக, சுகபோகமாக வாழவேண்டும், மற்றவர்களைவிட நாம் வசதியாக இப்பூமியில் வாழ்ந்துகாட்ட வேண்டும், அதுவே தேவன் நமக்குக் கொடுக்கும் ஆசீவாதம் என்பாராம். இதுதான் நாம் ராஜரீக சந்ததி என்பதன் பொருள் என்று விளக்கம் கொடுப்பாராம். பிரியமானவர்களே இப்படிப்பட்டதான போதனை லௌகீக சம்பந்த மானதும், பேய்த் தனத்துக் கடுத்ததுமாயிருக்கிறது, நீங்கள் வஞ்சிக்கப்படாதீர்கள். பவுலுக்கு மாற்று வஸ்திரம் இல்லாத ஊழியம்தான் ராஜரீக ஊழியம். இயேசுவுக்கு தலைசாய்க்க இடமில்லாத ஊழியம்தான் ராஜரீக ஊழியம். நீங்கள் யார் ஊழியத்தைப் பின்பற்றப் போகிறீர்கள்? பவுலின் ஊழியத்தையா, இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தையா அல்லது இந்த நவீன பாஸ்டரின் ஊழியத்தையா. இந்த ஊழியக்காரன் இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் எனக்கூறி, களையை விதைத்து, சபையை உலகப்பிரகாரமாக வழிநடத்தி வருகிறார்.

43. தீருவின் அதிபதியைப் பாருங்கள். அவன் தன் ஞானத்தினாலும், புத்தியினாலும் பொருள் சம்பாதித்து; பொன்னையும் வெள்ளியையும் தன் பொக்கிஷ சாலையில் சேர்த்து தன் வியாபாரத்தினாலும், மகா ஞானத்தினாலும் தன் பொருளைப் பெருகப்பண்ணினான். அவ்வாறாகவே இன்று ஊழியத்தின் பெயரில் அநேக கள்ள கபடமுள்ள வேலையாட்கள் தங்கள் ஆஸ்திகளைப் பெருகப்பண்ணி வருகிறார்கள். சாத்தானுடைய பிள்ளைகளே, ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்தவர்களே தங்கள் ஞானத்தினாலும் புத்தியினாலும் ஊழியத்தின்பேரில் பணம் சம்பாதித்து, செல்வ மிகுதியினால் மேட்டிமை கொண்டு ஆடம்பரமாக வாழ்கிறார்கள். ஆனால் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு உலகம் தரும் ஐசுவரியத்தையும், ஆஸ்தியையும் கொடுக்காமல், உன்னதங்களிலே

ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதிக்கிறார். ஆதலால் தேவனுடைய பிள்ளைகள் இந்த உலகப் பிரகாரமான, வனாந்தர ஜீவியத்திலே, ஊழியத்திலே தரித்திரர் என்னப்பட்டாலும் அநேகரை ஐசுவரியவான் களாக்குகிறவர்களாக தங்களை விளங்கப்பண்ணுகிறார்கள். பவுல் ஊழியத்தின் தன்மையைக் குறித்து நீங்கள் 2கொரி.6 அதியை வாசியுங்கள்.

44. இங்கு எனக்கு ஒரு சம்பவம் ஞாபகம் வருகிறது. இந்நாட்களில் செல்வ, சுகபோகத்தில் வாழும், ஒரு ஊழியக்காரரிடம் எனக்கு மிக்க நெருக்கமான ஒரு சகோதரன் சென்று, சகோதரனே சகோ.யோசுவா வாழ்க்கை யின் பாதையில் மிக்கக் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கிறார், நீங்கள் வசதியாக இருப்பதால் ஏன் அவருக்கு உதவிகள் செய்யக்கூடாது என்று கூறினாராம். அதற்கு அவர் பாருங்கள், ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நான் மிக்கக் கஷ்டப்பட்டேன், அவர் வசதியாக வாழ்ந்தார். இப்பொழுது கர்த்தர் என்னை ஆசீர்வதிக்க நான் சுகபோக மாக வாழ்கிறேன், அவர் கஷ்டப்படுகிறார், ஏனென்றால் அவரிடத்தில் தேவஆசீவாதம் இல்லை என்றாராம்.

45. பிரியமானவர்களே இவரது விளக்கத்தை நீங்கள் தேவனுடைய வார்த்தையோடு ஒப்பிட்டுப்பாருங்கள். ஆதி சபை காலத்தில் ஊழியர்கள் தங்கள் அழைப்புக்கு முன் சுகபோகமாகத்தான் இருந்தார்கள். ஆனால் ஊழியப்பாதையில் கஷ்டத்தின் மத்தியில்தான் ஜீவித்தார்கள். உண்மையும் உத்தமுமான ஊழியர்கள் தங்கள் ஊழியத்தின் பாதையில் சுகபோகமாக வாழ்ந்ததாக வேதத்தில் எங்கும் ஆதாரங்கள் இல்லை. கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். 2தீமோ.3:12. கிறிஸ்துவினி டத்தில் விசுவாசிக்கிறதற்கு மாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப் பட்டிருக்கிறது. பிலி.1:29.

46. ஆனால் கபடமுள்ள வேலையாட்கள் பொருளாசையுள்ளவர்களாய் மாயம்பண்ணி 1தெச.2:5. உறுதி யில்லாத ஆத்துமாக்களை தந்திரமாகப் பிடித்து, பொருள் சம்பாதித்து, தங்கள் வஞ்சனைகளினால் உல்லாச மாய் வாழ்கிறார்கள். ஒருவன் தேவனுக்கும் உலகப் பொருளுக்கும் ஊழியஞ் செய்யக்கூடாது. மத்.6:24. உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகை. ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாய் இருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாயிருக்கிறான். ஆதலால் அவர்கள் விபசாரக்காரர், விபசாரக்காரி என்று அழைக்கப் படுகிறார்கள். யாக.4:4. இவர்கள் பொருளாசை உள்ளவர்களாய் தந்திரமான வார்த்தையினால் விசுவாசிகளை தங்களுக்கு வசப்படுத்திக் கொள்கிறார்கள். 2பேது.2:3. ஆதலால்தான் அந்த சகோதரன் இப்பிரபஞ்சத்தில் சுகபோகமாக வாழ்கிறார். பவுல் தன் பழைய ஜீவியத்தில் பணவசதி உள்ளவனாய், கல்விமானாய், ஞானியாய் இருந்தான். ஆனால் கிறிஸ்துவுக்குள்ளான ஜீவியத்தில் பிலிப்பு பட்டணத்தின் சபை உதவியைப் பெற்று வாழ்ந்தான். பிலி.4:18. இயேசு கிறிஸ்துவின் நிமித்தம், சுவிசேஷத்தின் நிமித்தம் ஒருவன் தன் ஆஸ்திகளை இழந்தால், தன் சுகபோகத்தை இழந்தால், தன் ஆடம்பர வாழ்க்கை வசதிகளை இழந்தால் அது அவனுக்கு லாபமேயன்றி நஷ்டமில்லை. தியானியுங்கள் மாற்.10:29,30.

47. **Riches and lots of money and thing mean so much to people today ! People thing because you have a big ministry you ought to own all this and all this, and all those great big things and big schools and big so and so. God doesn't deal in their things.**

48. நாம் நிர்வாணிகளாய்ப் பிறந்தோம். இந்த உலகத்திலே நாம் ஒன்றும் கொண்டு வந்ததுமில்லை, இதிலிருந்து ஒன்றும் கொண்டுபோவதுமில்லை என்பது நிச்சயம். ஆதலால் போதுமென்ற மனதுடனே கூடிய தேவபக்தியே மிகுந்த ஆதாயம். உண்ணவும் உடுக்கவும் நமக்கு உண்டாயிருந்தால் அது போதுமென்றிருக்கக் கடவோம். 1தீமோ.6:6-8. மனரம்மியமோ நித்திய விருந்து. கர்த்தரைப் பற்றும் பயத்தோடு கூடிய கொஞ்சம் பொருளே உத்தமம். நீதி.15:15,16.

49. தாவீதின் விண்ணப்பம் என்ன? கர்த்தாவே என் ஆத்துமாவை துன்மார்க்கனுடைய கைக்கு உம்முடைய பட்டயத்தினால் தப்புவியும். மனுஷருடைய கைக்கும் இம்மையில் தங்கள் பங்கைப் பெற்றிருக்கிற உலக மக்களின் கைக்கும் உம்முடைய கரத்தினால் என்னைத் தப்புவியும், அவர்கள் வயிற்றை உமது திரவியத்தினால் நிரப்புகிறீர், அவர்கள் புத்திர பாக்கியத்தினால் திருப்தியடைந்து, தங்களுக்கு மீதியான பொருளை தங்கள் குழந்தைகளுக்கு வைக்கிறார்கள், நானோ நீதியில் உம்முடைய முகத்தை தரிசிப்பேன், நான் விழிக்கும் போது உமது சாயலால் திருப்தியாவேன் என்கிறான். சங்.17:14,15.

50. பிரசங்கி, சூரியனுக்குக் கீழே கண்டத் தீங்கைப் பாருங்கள். ஒருவனுக்கு தேவன் செல்வத்தையும், சம்பத்தையும், கனத்தையும் கொடுக்கிறார்: அவன் என்ன இச்சித்தாலும் அதெல்லாம் அவனுக்கு குறைவில்லா மல் கிடைக்கும்: ஆனாலும் அவைகளை அனுபவிக்கும் சக்தியை தேவன் அவனுக்குக் கொடுக்கவில்லை. அந்நிய மனுஷன் அதை அனுபவிக்கிறான். பிர.6:2.

51. பொதுவாக மக்கள் உள்ளத்தை பணம் கொள்ளைக் கொண்டுவிட்டது. இதினிமித்தமாக இன்று நாட்டில் எங்கும் லஞ்சப்பேய் தலைவிரித்தாடுகிறது. போக்கிறிஸ்தவனே லஞ்சம் வாங்குகிறான். உண்மைக் கிறிஸ்தவன் லஞ்சம் வாங்கமாட்டான். இதிலிருந்து போக்கிறிஸ்தவன் யார், உண்மைக் கிறிஸ்தவன் யார்

என்பதை நீங்கள் அடையாளம் கண்டுகொள்ளலாம். ஒருமுறை ஒரு அரசாங்க அதிகாரியிடம் நீங்கள் ஏன் சார் லஞ்சம் வாங்குகிறீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் கூறியதாவது பாருங்கள், கல்லூரிகளில் படிக்க நன்கொடை என்ற பெயரில் லஞ்சம், படித்து முடித்தபின் வேலையில் அமர லஞ்சம், இவ்வாறாக படிப்பு ஆரம்பம் முதல் படிப்பு முடித்து வேலைக்கு வரும் வரை எங்கும் எதிலும் லஞ்சம் மயமே. இப்பொழுது வேலையில் அமர்ந்து நான் இதுவரை கொடுத்த லஞ்சத்தை ஈடுகட்டுவதற்காக லஞ்சம் வாங்க நிர்ப்பந்தப்படு கிறேன் எனக் கூறினார். சில ஆண்டுகளுக்கு முன்பு ஒரு அரசாங்க அலுவலகத்துக்குச் சென்றேன். அதிகாரி என் பேப்பரில் கையெழுத்துப் போடும்போது என்னைக் கூப்பிட்டு பணம்கேட்க, ஐயா, நான் பொய்களைக்கூறி தங்களிடம் கையெழுத்து வாங்க வரவில்லை, ஆதலால் நீங்கள் பணம்கேட்பது நியாயமில்லை என்றேன். அதற்கு அவர் இந்த அலுவலகத்துக்கு நேர்மையாக வந்தாலும், தவறுகள் செய்து வந்தாலும் கையெழுத்துக்கு பணம் கொடுக்கவேண்டும் என்றார். நான், என்னிடம் பணம் இல்லை என்றேன். பணம் கொண்டுவந்து கொடுத்து விட்டு கையெழுத்தை வாங்கிச் செல்லுங்கள் என்றார். அங்கு நின்றுகொண்டிருந்த பியூன், ஐயா இவர் எனது பக்கத்து வீட்டுக்காரர், பணத்திற்கு நான் பொறுப்பு, ஆதலால் நீங்கள் கையெழுத்துப் போட்டுக்கொடுங்கள் என்றுகூற, பின் கையெழுத்துப் போட்டுக்கொடுத்தார். பொதுவாக எந்த ஒரு அரசாங்க அலுவலகத்துக்குள்ளும் நுழைய முடியவில்லை. அங்கு பியூன் முதல் பிரதமமந்திரி வரை ஒரே ஊழல், லஞ்சம். இந்தநிலை ஏன்? சாத்தான் இப்பிரபஞ்சத்தின் அதிபதியாக இருப்பதால்தான்.

52. நாட்டில் நியாயாதிபதி கைக்கூலி கேட்கிறான். நியாயாதிபதிகள், தலைவர்கள் பண ஆசையினால் கொஞ்சமேனும் தெய்வபயம் இல்லாது லஞ்சம் பெற்று ஏழைகளின் நியாயத்தைப் புரட்டுகிறார்கள். பரிதானத்திற் காக நியாயம் தீர்க்கிறார்கள்.

53. சமுதாயத்தில் உயர்ந்த பதவிகளில் இருக்கிறவர்களும் பொருளாசைக்காரராக லஞ்சம் எதிர்பார்க்கி றார்கள். அந்நாட்களில் தேசாதிபதியாகிய பேலிக்ஸ் பவுலை விடுதலைப் பண்ணும்படி தனக்கு அவன் பணம் கொடுப்பான் என்று நம்பிக்கை உள்ளவனாயிருந்தான். அப்.24:26. ஒருமுறை ஒரு அரசாங்க அலுவலகத்துக்கு என் சுய காரியமாகச் சென்றேன். அங்கு இருந்த அதிகாரியைப் பார்த்தவுடன் எனக்கு ஒரே மகிழ்ச்சி. ஏனென்றால் நான் ஓரிரு ஆண்டுகளுக்கு முன்பு இந்த அதிகாரியை சந்தித்து இருக்கிறேன். நாங்கள் இருவரும் எங்களது குடும்ப காரியங்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டோம். எங்களுக்குள் நல்ல பழக்கம் ஏற்பட்டது. ஆக நான் சென்ற காரியத்தை முடித்துக்கொடுத்தார். ஆனால் பேப்பர்கள் என்னிடம் வரவில்லை. விசாரிக்க, அந்த அதிகாரி என்னிடம் பணம் எதிர்பார்க்கிறார் எனத்தெரியவந்தது, அவரை அணுக, உண்மை யாகவே என்னடமிருந்து பணம் எதிர்பார்த்தார்.

54. தீர்க்கதரிசிகள் பணத்திற்காக குறிசொல்லுகிறார்கள். மக்கள் விருப்பப்படி கர்த்தர் உரைக்கிறதாவது எனக்கூறி பணம் சம்பாதிக்கிறார்கள்.

55. கர்த்தருடைய ஊழியம், ஊழியம் எனக்கூறி ஊழியம் செய்யவராது ஊதியம் பெற வந்து பணத்துக் காக சபை உருவாக்குகிறார்கள், சுவிசேஷ கூட்டங்கள் நடத்துகிறார்கள், பாடுகிறார்கள், ஆடுகிறார்கள், பிரசங்கிக்கிறார்கள், உபதேசிக்கிறார்கள், ஆசீர்வதிக்கிறார்கள்.

56. ஆனால் இவர்கள் யாவரும் கர்த்தரைச் சார்ந்துகொண்டு, கர்த்தர் பெயரில் அனைத்துத் தில்லு முல்லு, பித்தலாட்டங்களைச் செய்து கர்த்தர் எங்கள் நடுவில் இல்லையோ, ஆதலால் தீங்கு எங்கள் மேல் வராது என்கிறார்கள். தியானியுங்கள். மீகா.3:11.

57. பரிதானம் வாங்குவதும் பொருளாசையே. பரிதானம் பார்வை உள்ளவர்களைக் குருடாக்கி, நீதிமான் களின் வார்த்தையைப் புரட்டும். யாத்.23:7,8. பரிதானம் ஞானிகளின் கண்களைக் குருடாக்கி, நீதிமான்களின் நியாயத்தைத் தாறுமாறாக்கும். உபா.16:19. பரிதானம் வாங்குகிறவன் சபிக்கப்பட்டவன். உபா.27:25. இன்றைய கிறிஸ்தவ மக்களின் பெரும்பாலானோர் பரிதானம் வாங்குகிறவர்களாகவே இருக்கிறார்கள். அவர்கள் யாவரும் தேவனுடைய வார்த்தையின்படி சபிக்கப்பட்டவர்களே.

58. நீதியாய் நடந்து, செம்மையானவைகளைப் பேசி, இடுக்கண் செய்வதால் வரும் ஆதாயத்தை வெறுத்து, பரிதானங்களை வாங்காதபடிக்குத் தன்கைகளை உதறுகிறவன் உயர்ந்த இடங்களில் வாசம் பண்ணு வான். கன்மலைகளின் அரண்கள் அவனுடைய உயர்ந்த அடைக்கலமாகும், அவன் அப்பம் அவனுக்கு கொடுக்கப்படும், அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும். ஏசா.33:15,16.

59. இந்நாட்களில் ஊழியர்கள் பண ஆசையின் நிமித்தமாக, ஏழை எளிய விசுவாசிகளை வஞ்சித்து அவர்களிடமிருந்து தசமபாகம் காணிக்கை எனப் பெற்று, தங்கள் சொந்த திட்டங்களை நிறைவேற்றி, சம்பிரம மாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழல்கிறார்கள். இந்த அளவுக்கு ஊழியர்களை பொருளாசை ஆட் கொண்டு விட்டது. இவர்கள் தங்கள் வஞ்சனைகளினால் உல்லாசமாய் வாழ்கிறார்கள். இவர்கள் உறுதியில் லாத ஆத்து மாக்களை தந்திரமாய்ப்பிடித்து, பொருளாசையில் பழகின இருதயத்தை உடைய சாபத்தின் பிள்ளைகளாயிருக்கி றார்கள். இவர்கள் செம்மையான வழியை விட்டுத் தப்பி நடந்த பேயோரின் குமாரனாகிய பிலேயா மின் வழியை பின்பற்றிப் போனவர்கள். 2பேதுரு.2:14,15.

60. இந்நாட்களில் ஊழியர்கள் வரங்களை நாடுகிறார்கள். அதில் முக்கியமாக குணமாக்கும் வரங்களை நாடுகிறார்கள். ஆவியின் அனுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அருளப்பட்டிருக்கிறது. ஆவியானவர் தமது சித்தத்தின்படி அவனவனுக்கு வரங்களைப் பகிர்ந்து கொடுக்கிறார். 1கொரி.12:7-11. குணமாக்கும் வரங்கள் ஒருவனில் கிரியைசெய்ய, அதன் மூலம் குணம் பெற்றவர்கள் காணிக்கையாக பணம் கொடுக்கிறார்கள். ஆனால் உண்மையான ஊழியக்காரன் இப்படிப்பட்ட காணிக்கைகளை ஏற்றுக்கொள்ளமாட்டான். ஏனென்றால் அவன் அந்த வரத்தை இலவசமாய்ப் பெற்றதினால் இலவசமாகவே அந்த வரத்தின் பலனைக் கொடுக்கவேண்டும். ஆனால் இன்று ஊழியர்கள் பொருளாசை உள்ளவர்களாய், குணமாக்கும் வரத்தை தேவனுடைய அனுமதிக்கும் சித்தத்தின்கீழ் பெற்று, பணம் சம்பாதித்து தங்கள் அழிவை நியமித்துக் கொண்டிருக்கிறார்கள். இன்று நம் மத்தியில் உள்ள அநேக ஊழியர்களின் நிலை இதுவே. மத்.7:22,23.

61. அன்று மாயவித்தைக்காரனாகிய சீமோன் பணத்தினால் தேவனுடைய வரத்தைப்பெற்றுக்கொள்ள நினைத்தான். அப்.8:18,19. ஆனால் இன்று அவனைப்போன்றவர்கள் உபவாசத்தைக்கொண்டு, ஏனென்றால் தேவன் தம்மிடத்தில் பசியும் பட்டினியுமாய் வருகிறவர்களை வெறுமையாய் அனுப்புவது கிடையாது. மாற்.8:1-3, கர்த்தருடைய அனுமதிக்கும் சித்தத்தின்கீழ் வரங்களைப் பெற்று அதன் மூலம் பணம் சம்பாதித்து சுகபோகமாக வாழ்ந்து, தங்களைத் தாங்களே ஏமாற்றிக்கொண்டிருக்கிறார்கள். மத்.7:22,23. மற்றவர்களையும் ஏமாற்றுகிறார்கள்.

62. **Look at people today fine men out on the field, praying for the sick and charging money for it, that's wrong . If a man's got faith for healing and praying for the sick, he ought to be gentle man enough to pray for the people without money. Q & A 50, Para 323.**

63. **The biggest church there is, we own them ; and we still got plenty of money. Don't you think God's blessed us? No, you are off His word. God going to distroy it. God never goes for wrong. God never goes for popularity.**

64. அன்றைய பெந்தெகொஸ்தே ஊழியத்துக்கும், இன்றைய ஊழியத்துக்கும் உள்ள வித்தியாசத்தை நன்கு கவனியுங்கள். இன்று பெந்தெகொஸ்தே ஊழியம், கடைசிகால செய்தி ஊழியம் என்ற பெயரில் பணம் சம்பாதிக்கும் தொழிலே நடக்கிறது. இதனால் உண்மையான ஊழியம் இல்லை என்று பொருள் இல்லை. அதுவும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. உண்மையான ஊழியத்தில் உள்ளவர்கள் பணம் பறிக்கும் தொழில்களில் ஈடுபடமாட்டார்கள். பாருங்கள், இந்நாட்களில் என்னுடைய ஊழியம் பெரியது, கர்த்தர் இதை ஆசீர்வதித்து வருகிறார். ஆதலால் என்னிடம் பங்களா, கார் வசதிகள் உண்டு, வீட்டில் குளிர்சாதன அறைகள் உண்டு, தொலைக்காட்சி இருக்கிறது, கம்ப்யூட்டர் இன்டெர்நெட் வசதிகளுடன் இருக்கிறது என தங்கள் வசதி களை அடுக்கிக்கொண்டே போகிறார்கள். ஆனால் ஆதி அப்போஸ்தல, பெந்தெகொஸ்தே ஊழியத்தைப் பாருங்கள். அவர்கள் தங்களுக்குரியது எல்லாவற்றையும் விற்று, தங்களுக்குள் பகிர்ந்துகொண்டு, சமநிலை பிரமாணத்தைக் கடைபிடித்து ஏழை எளிய வாழ்க்கை வாழ்ந்து, திக்கற்றவர்களுக்கும் விதவைகளுக்கும் உதவிகள் செய்து வாழ்ந்தார்கள். அப்படிப்பட்ட மனநிலை நீங்கள் இந்நாட்களில் ஊழியர்களிடம் காண்பது அரிது. ஏனென்றால் இவர்களுடைய ஊழியம் உண்மையான ஊழியம் இல்லை. மேலும் இவர்கள் மாயையில் வாழ்ந்து வருகிறார்கள்.

65. நீங்கள் வேதாகமத்தில் கீழ்கண்டவர்களின் பொருளாசையைக் குறித்தும், அவர்களின் முடிவைக் குறித்தும் தியானிக்கலாம்.

1. லாபானின் பொருளாசை. ஆதி.31:41.
2. பிலேயாமின் பொருளாசை. எண்.22:21, 2பேது.2:15, யூதா. :11.
3. ஆகான். யோசு.7:21.
4. சவுல். 1சாமு.15:9.
5. ஆகாப். 1இராஜா.21அதி.
6. கேயாசி. 2இராஜா.5:20.
7. தீர்க்கதரிசியாகிய சாமுவேலின் புத்திரர். 1சாமு.8:3.
8. யூதாஸ். மத்.26:14, யோ.13:9, 12:6.
9. அனனியா, சப்பிராள். அப்.5அதி.
10. பரிசேயர். லூக்.16:14.
11. பேலிக்ஸ். அப்.24:26.

66. விலையுயர்ந்த சகல வித பொருள்களையும் கண்டடைவோம், கொள்ளைப் பொருள்களில் நம்முடைய வீடுகளை நிரப்புவோம். இதுவே பொருளாசையுடைய எல்லாருடைய வழி. நீதி.1:13,14.

1. பொருளாசையில் பழகின இருதயத்தை உடையவர்கள் சாபத்தின் பிள்ளைகள். 2பேது.2:14.
2. கள்ளருடைய கூடாரங்களில் செலவமுண்டு. யோபு.12:6.
3. பொருளாசைக்காரர்களுக்கு பூர்வ காலமுதல் விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது. அவர்களுடைய அழிவு உறங்காது. 2பேது.2:3.
4. பொருளாசைக்காரர்கள் மரணத்திற்குப் பாத்திரவான்கள். இது தேவன் தீர்மானித்த நீதியான தீர்ப்பு. ரோ.1:29,32.

5. பொருளாசைக்காரர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை. 1கொரி.6:10.
6. இயேசு: ஐசுவரியவான் பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பது அரிதென்று உங்களுக்குச் சொல்லுகிறேன். மத்.18:23.
7. விக்கிரகாராதனைக்காரர்கள் எல்லாம் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள். வெளி.21:8. இதுவே பொருளாசைக்காரனுடைய பங்கு. ஏனென்றால் அவன் ஒரு விக்கிரகாராதனைக்காரனே.
8. ஐசுவரியவானாகிறதற்குத் தீவிரிக்கிறவன் ஆக்கினைக்குத் தப்பான். நீதி.28:20.
9. மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்திக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத் தினால் அவனுக்கு லாபம் என்ன? மத்.16:26.

67. ஆதலால் பிரியமானவர்களே :
1. நாம் பண ஆசை இல்லாதவர்களாய் நடந்து, இருக்கிறவைகள் போதுமென்று எண்ணக்கட வோம். எபி.13:5.
2. விக்கிரகாராதனையான பொருளாசையை பூமியில் உண்டுபண்ணுகிற நம்முடைய அவயவங் களை அழித்துப்போடுவோம். கொலோ.3:5.
3. கர்த்தர் பொருளாசை என்னும் அக்கிரமத்தின் நிமித்தம் கடுங்கோபமாகி இஸ்ரவேல் ஜனங் களை அடித்தேன் என்கிறார். ஏசா.57:17.
4. செல்வம் என்றென்றைக்கும் நிலையாது. நீதி.27:24.
5. ஆதலால் ஐசுவரியம் விருத்தியானால் இருதயத்தை அதின்மேல் வைக்காதே. சங்.62:10.
6. பொருளாசையை வெறுக்கிறவன் தீர்க்காயுசைப் பெறுவான். நீதி.28:16.

68. முடிவாக பணஆசை ஒருவனுடைய வாழ்க்கையில் எல்லாத் தீமைக்கும் வேராயிருக்கிறது. சிலர் இதை இச்சித்து, விசுவாசத்தைவிட்டு வழுவிப்போனார்கள். நீயோ, தேவனுடைய மனுஷனே, இதை விட்டோடி, நீதியையும், தேவபக்தியையும், விசுவாசத்தையும், அன்பையும், பொறுமையையும், சாந்தகுணத்தையும் அடையும் படி நாடு. நமது மத்தியில் உள்ள ஐசுவரியமுள்ளவர்கள் இறுமாப்பான சிந்தையுள்ளவர்களாயிராமலும், நிலை யற்ற ஐசுவரியத்தின்மேல் நம்பிக்கைவையாமலும், நாம் அனுபவிக்கிறதற்குச் சகலவித நன்மைகளையும் நமக்குச்சம்பூரணமாய்க் கொடுக்கிற ஜீவனுள்ள தேவன்மேல் நம்பிக்கை வைத்து, நன்மை செய்யவும், நற்கிரியை களில் ஐசுவரியவான்களாகவும், தாராளமாய்க் கொடுக்கிறவர்களாகவும், உதார குணமுள்ளவர்களாகவும் இருப்பார் களாக. நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம். தியானியுங்கள். 1தீமோ.6:6-11,17,18 ; எபே.2:10. நன்மை செய்யுங்கள். கைமாறு கருதாமல் கடன்கொடுங்கள். அப்பொழுது உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். லூக்.6:15. வாரியிறைத்தான், ஏழை களுக்குக் கொடுத்தான்; அவனுடைய நீதி என்றென்றைக்கும் நிற்கும். சங்.112:9.

69. மகிழ்ச்சியாய் இருப்பதும், உயிரோடிருக்கையில் நன்மை செய்வதுமேயல்லாமல், வேறொரு நன்மை யும் மனுஷனுக்கு இல்லை என்று நான் பிரசங்கி மூலம் அறிந்துகொண்டேன். நீங்கள்? கர்த்தாவே என் இருதயம் பொருளாசையைச்சாராமல், உமது சாட்சிகளைச் சாரும்படி செய்யும். சங்.119:36. அநேகமாயிரம் பொன் வெள்ளியைப் பார்க்கிலும், நீர் விளம்பின வேதமே எனக்கு நலம் என்கிறான் சங்கீதக்காரன். சங்.119:72. யாக்கேயின் குமாரனாகிய ஆகூர் தேவனிடத்தில் இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும் பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும் என்கிறான். அதாவது மாயையையும் பொய் வசனிப்பை யும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறுதலித்து; கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும், தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும் என்கிறான். நீதி.30:7-9. இதுவே தேவனிடத்தில் நம்முடைய விண்ணப்பமாயுமிருக்கட்டும்.

70. பொன், வெள்ளியுமோ, பெரும் போபுகழோ, பண ஆஸ்தியும் வீண் அல்லவோ, பரலோகத்தின் செல்வமே என் அரும் இயேசுவே போதும் எனக்கு நீரே. அல்லேலூயா ! மகிமை ! இந்தப்பாடலை சபையில் பாடவேண்டாம் என்று கூறிய இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் என்று கூறும் நூதன பாஸ்டருக்காகவும், நான் இச்செய்தியில் இங்கு சுட்டிக்காட்டிய இக்காலத்துக்குரிய செய்தியில் இருக்கிறேன் எனக்கூறும் பொருளாசைக்காரருக்காக இந்தச் செய்தியை எழுதத் தூண்டப்பட்டேன்.

71. கிருபையானது உங்களனைவரோடுங்கூட என்றென்றைக்கும் இருப்பதாக. ஆமென்.

மே ,2001

கிறிஸ்துவின் அன்பில்,

**சகோ.காலேப் யோசுவா.**